மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

முன்னிலை:- திரு, சி. சங்கர், பி.ஏ.எம்.எல்.,பி.ஜி.டி.சி.எப்.எஸ்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.

2015ம் ஆண்டு ஜுன் திங்கள் 29ம் நாள் திங்கள்கிழமை
அசல் வழக்கு எண்.56/2007.
(கோடைகால விடுமுறை நீதிமன்றம்,(மாவட்ட நீதிமன்றம்)
(இ) ஸ்ரீவில்லிபுத்தூர், அசல் வழக்கு எண்.54/2007)

-------------

மூ. முஹபூப்ஜான் .. வாதி ..

/எதிர்/

1. ஊ. லியாகத் அலிஷாசாகிப்
2. ஹீராஜான்
3. காதர் ஜான்
4. பரீத்மஹபூப்ஜான் .. பிரதிவாதிகள் ..

இவ்வழக்கு கோடைகால விடுமுறை நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், (இ) ஸ்ரீவில்லிபுத்தூரில் 11.05.2007 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கு மாற்றம் செய்யப்பட்டு 04.06.2007-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 19.06.15ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M. இப்ராகிம்பாபு அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்களாகவும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. கந்தசாமி அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தும், எழுவினாக்கள் வனையப்பட்ட பின்னர், வழக்கு பட்டியலில் போடப்பட்டு, வாதியின் முதல் விசாரணை முடிந்த நிலையில், வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக 1ம் பிரதிவாதியை அழைத்தும் ஆஜராகாததாலும், 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் எந்த தகவலும் இல்லை என்று எடுத்துரைத்ததாலும் பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்சமாக்கப்பட்ட நிலையிலும், இருதரப்பு வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை:-</u>**

பிராதின் “ஆ” தபசில் கொல்லை நிலம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கோரியும் அதன் தொடர்ச்சியாக “ஆ” தபசில் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை 1ம் பிரதிவாதி இடையூறு செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், “இ” தபசில் சந்து வாதிக்கும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கோரியும், அதன் தொடர்ச்சியாக “இ” தபசில் சந்தை வாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை 1ம் பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 1ம்

பிரதிவாதி சமூகம் நீதிமன்றம் குறிப்பிடும் காலக்கெடுவிற்குள் "ஈ" தபசில் விவரிக்கப்பட்டிருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரியும், தவறும்பட்சத்தில் நீதிமன்றத்தின் அமீனா மூலம் "ஈ" தபசில் விவரிக்கப்பட்டிருக்கும் ஆக்கிரமிப்பை அகற்ற செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், "ஈ" தபசில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான செலவுத்தொகையை 1ம் பிரதிவாதி வாதிக்கு கொடுக்கக்கோரியும், இவ்வழக்கின் செலவுத்தொகைக் கோரியும் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராதின் சுருக்கம்:-</u>**

i) பிராது தபசில் சொத்துக்கள் வரைபடத்தில் EFGCMH என்று காட்டப்பட்டிருக்கிறது. அது வாதியின் தந்தை வீடு மற்றும் அதற்குத் தென்புறம் உள்ள காலிஇடத்தை உள்ளடக்கியது. பிராது "ஆ" தபசில் சொத்து "அ" தபசில் சொத்திற்குத் தென்புறம் வரைபடத்தில் MCPN என்று காட்டப்பட்டிருக்கும். கொல்லை நிலம் "இ" தபசில் சொத்து வாதியின் வீட்டிற்கும் மற்றும் 2, 3, 4 பிரதிவாதிகளின் வீடுகள் வடபுறமாகவும், 1ம் பிரதிவாதியின் வீடு தென்புறமாகவும் இருக்க அவைகளின் நடுவே வரைபடத்தில் ABCR என்று காட்டப்பட்டிருக்கும் சந்து வாதியின் தந்தைக்கும், பிரதிவாதிகள் 2, 3, 4 ஆகியோருக்கும் மட்டும் பாத்தியப்பட்டதாகும். 1ம் பிரதிவாதியின் வீடும் அதற்கு கிழக்கே உள்ள "பி" தபசில் கொல்லை நிலம் ஆகியவை ஆதியில் காலி நிலங்களாக இருந்தன. அவரவர் வீட்டிற்குத் தெற்கே உள்ள காலியிடம் அவரவருக்குத் தனித்துப் பாத்தயப்பட்டிருந்தாலும், வாதியினுடைய மற்றும் 2, 3, 4 பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்களும் அவர்களுக்கு பிறகு தாங்களும் "இ" தபசில் சொத்தைப் பொது சந்தாகவே அனுபவித்து வருகிறார்கள்.

ii) பிராது "அ" மற்றும் "ஆ" சொத்துக்கள் அதற்கே மேற்கே உள்ள 2, 3 பிரதிவாதிகளின் சொத்தும் ஆதியில் 1ம் பிரதிவாதியின் தந்தை உமாசாகிப்பிற்கும் அவர் தம்பி ஷேக் முகமது சாகிப்பிற்கும் பாத்தியப்பட்டிருந்தது. அந்த சொத்தை அவர்கள் இருவரும் வாதியின் தந்தை வழிபாட்டி ஜென்னாபீவியின் தாயாராகிய தாத்திபீவிக்கு 15.07.1873-ம் தேதிய ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் செய்து விட்டார்கள். 14.10.1960-ம் தேதிய பதிவு செய்யப்பட்ட பாகவிஸ்தி

பத்திரப்படி வாதியின் தந்தையின் பாட்டி ஜென்னாபீவிக்கு தாவா “அ” மற்றும் “ஆ” அயிட்ட சொத்துக்கள் கிடைத்தன. ஜென்னாபீவி 1964-ல் இறந்து போனார். அவருக்குப் பின் பாகவிஸ்திபத்திரப்படி “அ” மற்றும் “ஆ” தபசில் சொத்துக்கள் வாதியின் தந்தையின் தந்தைக்கு கிடைத்து அவர் அனுபவித்து வந்தார். அவரும் 1986-ல் எந்தவித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்து போனார். அவருக்கு வாதியின் தந்தை மட்டும் தான் வாரிசு ஆவார். எனவே வாரிசு கிரமத்தில் வாதியின் தந்தை “அ” மற்றும் “ஆ” சொத்துக்களை அடைந்து அனுபவித்து வருகிறார். “இ” தபசில் சொத்தை எல்.எப்.ஆடிட் ஆபிஸ் தெருவிற்குப் போகவும், வாதியின் தந்தையின் கொல்லை நிலமான “ஆ” தபசில் சொத்திற்கு செல்லவும், வாதியின் தந்தை வீட்டின் தென்புற HK சுவரை பராமரித்து செய்யவும், வாதியின் தந்தையின் முன்னோர்களைப் போல் வாதியும், வாதியின் தந்தையும் அனுபவித்து வருகிறார்கள். வாதியின் தந்தை பாதுகாப்பு கருதி HG மண்சுவரையும் அதிலிருந்த கதவையும் எடுத்துவிட்டு, அதை செங்கல் சுவராக கட்டி காற்றும் வெளிச்சமும் வர ஒரு ஜன்னல் வைத்துள்ளார்.

iii) KEHMJ2 என்ற பிராது வரைபடத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கும் சொத்து தாத்துபீவியால் உமர்சாஹிப் ஷேக் முகம்மது சாகிப் ஆகியோரிடமிருந்து 29.05.1882 கிரையப்பத்திரப்படி கிரையம் வாங்கி அவரது இளைய மகனான காசீம் பீவிக்கு ஒரு குடும்ப ஏற்பாட்டின்படி கொடுக்கப்பட்டு காசீம் பீவி 12.01.1960ம் தேதிய பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் மூலம் ஹேக்பரீத் சாகிப்பிற்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார். “சி” செட்யூல் சந்தில் பகுதியும் அந்த கிரையப்பத்திரத்தில் சேர்ந்து கிரையம் செய்யப்பட்டிருக்கிறது. ஷேக் பரீத்சாகிப் 13.05.1965-ம் தேதிய உயில் மூலம் அந்த சொத்தை அவர் மகள் ஜவஹர்பீவிக்கு எழுதி வைத்துவிட்டு இறந்துவிட்டார். ஜவஹர் பீவி அந்த சொத்தை 2, 3 பிரதிவாதிகளுக்கு 20.05.1991-ம் தேதிய கிரையப்பத்திரம் மூலம் கிரையம் செய்து கொடுத்துவிட்டார். அவர்கள் வாங்கிய சொத்திற்கு தென்புறம் உள்ள “இ” தபசில் சந்தின் அந்தப் பகுதியையும் அவர்கள் கிரையம் வாங்கியிருப்பதால் அவர்களும், 4ம் பிரதிவாதியும், வாதியின் தந்தையும் “இ” தபசில் சந்தை பொதுவாக அனுபவித்து வருகிறார்கள். பிராது வரைபடத்தில் LKJJ1RA என்று காட்டப்பட்டிருக்கும் ஆர்.காளிநாடாருக்கும் அவர் தம்பி சின்னப்பநாடாருக்கும்

பாத்தியப்பட்டு இருந்தது. அவர்கள் இருவரும் அந்த சொத்தை 19.12.1895 தேதிய கிரையப்பத்திரம் மூலம் தாத்துபீவியின் அண்ணனாகிய ரோஷன்கான் சாகிப் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள். அப்படி கிரையம் செய்யப்பட்ட சொத்து வரைபடத்தில் RM என்று காட்டப்பட்டிருக்கும். “சி” செடியூல் சந்தில் AJJ1R பகுதியும் சேர்ந்தே கிரையம் செய்யப்பட்டிருக்கிறது. ரோஷன் கானின் வாரிசான ஷேக் சிக்கந்தர் சாகிப் இந்தச் சொத்தை அவரது மகனான 4ம் பிரதிவாதிக்கு 14.12.1993-ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார். எனவே “இ” தபசில் சொத்து வாதிக்கும், 2லிருந்து 4 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டு பொது அனுபவத்தில் இருந்து வருகிறது. 1ம் பிரதிவாதிக்கு எந்தவித பாத்தியதையும் இல்லை.

iv) வாதியின் தந்தை மேற்படி வீட்டின் தெற்குப்புற சுவரில் இருந்த ஜன்னல் கரையான் அரிக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையில் இருந்ததால் அதை எடுத்துவிட்டு வேறு ஜன்னல் மாட்ட முயற்சித்தார். அப்போது 1ம் பிரதிவாதி வாதியின் தந்தையை தடுத்து நிறுத்தி அப்படி ஜன்னல் வைக்கக்கூடாது என்று ஆட்சேபித்தார். தாங்கள் தபசில் சொத்தில் இல்லாததை பயன்படுத்திக் கொண்டு 1ம் பிரதிவாதி பிராது “இ” தபசில் விவரிக்கப்பட்டிருக்கும் கழிப்பறையையும், குளியலறையையும் தங்கள் வீட்டின் தெற்குச்சுவரான HG சுவருடன் பொருத்திக் கட்டிவிட்டார். “ஈ” தபசில் கழிப்பறை குளியலறை ஆகியவற்றின் வடக்குப்புறச்சுவர் வாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்ட HG சுவராக இருக்கிறது. “ஈ” தபசில் கழிவறையும், குளியலறையும் 1ம் பிரதிவாதியால் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருக்கிறது. அந்த ஆக்கிரமிப்பை கண்டறிந்து நீதிமன்ற ஆணையர் அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்துள்ளார். எனவே சமூகம் நீதிமன்றம் “ஆ” தபசில் கொல்லை வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கோரியும் அதன் தொடர்ச்சியாக 1ம் பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டும், தபசில் சந்து வாதியின் தந்தைக்கும் 2லிருந்து 4 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்து அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் 1ம் பிரதிவாதி சமூகம் நீதிமன்றம் குறிப்பிடும் காலக்கெடுவிற்குள் “ஈ” தபசில் விவரிக்கப்பட்டிருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்ற ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இந்த பிராது தாக்கல்.

**3) 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை விபரம் :-** கடந்த 1873 முதலாகவே “சி” செடியு’ல் சொத்தின் தெற்கு பக்கம் 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்கு பக்க நிலம் காலி கொல்லையாக இருந்தது என்பதும் அதனை உமர் சாகிப் என்பவர் அருணாசலப்பிள்ளைக்கு எழுதிக்கொடுத்துள்ள 15.07.1873-ம் தேதிய அடமான கடன் பத்திரத்தில் கண்ட மால்களின்படி உறுதிசெய்யப்படுகின்றது என்பதும் மறுக்கப்படுகிறது. பிராதில் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் முற்றிலும் மறுக்கப்படுகின்றது. உண்மையில் வாதிக்கு தபசில் கண்ட “சி” செடியூல் சொத்தில் எந்தவித உரிமையும் பாத்தியமும் கிடையாது. வாதி பிராதில் சொல்லியுள்ள கழிப்பறையும், குளியலறையும் நினைவு தெரிந்த நாள் முதலாகவே இருந்து அது இந்த 1ம் பிரதிவாதி அனுபவத்தில் இருந்து வருகின்றது. வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்த பின்னர் இந்த வழக்கிற்காக என்று வரைபடத்தில் ஹெச் ஜி சுவரில் 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான கழிப்பறை, குளியலறை மேல் சுவரில் தானாகவே பெரிய ஓட்டையை ஏற்படுத்தி அதில் ஜன்னல் இருந்ததாக பொய்யான சங்கதிகளை கூறியுள்ளார். மேலும் தாவா “சி” செடியூல் சொத்தினை வாதி எந்த காலத்திலும் அனுபவம் செய்ததே கிடையாது. ஆதி வீதியில் இருந்து “சி” செடியூல் சொத்திற்கு செல்லும் வரைபடத்தில் “ஏ” ஆக காட்டப்பட்டுள்ளதில் கதவினை அமைத்து அதன் சாவி இந்த 1ம் பிரதிவாதி வசமே இருந்து வருகின்றது. எனவே அதன் வழியாக வாதி சென்று வந்து “சி” செடியூல் சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்பது பொய்யான சங்கதிகள் ஆகும். வாதிக்கு தபசில் கண்ட “பி” மற்றும் “சி டி” செடியூல் சொத்துக்களில் எந்த உரிமையும் பாத்தியமும் கிடையாது. எனவே வாதி தாக்கல் செய்துள்ள பிராதினை இந்த 1ம் பிரதிவாதியின் செலவு தொகையோடு தள்ளுபடி செய்து உத்திரவிடவேண்டி இந்த எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) எழுவினாக்கள்:-** பிராது எதிர்வழக்குரை ஆவணங்களை பரிசீலித்து வழக்கு விசாணைக்காக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

1. பிராது A தபசில் சொத்தான EFGCMH என்ற பகுதியானது வாதிக்கு பாத்தியப்பட்டதா?
2. வழக்கின் 2 முதல் 4 எதிர்வாதிகளின் வீடுகளானது பிராது A தபசில் சொத்துக்கு மேல் பக்கம் உள்ளதா?

3. பிராது சி தபசில் சந்தானது வாதிக்கும், 2 முதல் 4 எதிர்வாதிகளுக்கும் தனித்து பாத்தியப்பட்டதா?
4. பிராது பி தபசில் சொத்தான “எம்.சி.பி.என்” என்ற பகுதியானது கொல்லை நிலம் என்று வாதி கூறுவது சரியா?
5. பிராது வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள “எப்.ஜி.சி.எம்.ஜே.கே” என்ற பகுதியான கொல்லை காலிமனைக்கும் தெற்கு உள்ள பகுதியானது உமர்சாகிப் என்பவருக்கு பாத்தியப்பட்டதா?
6. வாதியானவர் பிராது “எ” மற்றும் “பி” தபசில் சொத்தை அனுபவித்தும், “பி” தபசில் சொத்தை சி தபசில் சந்து வழியாக சென்று பயன்படுத்துவதாக கூறுவது சரியா?
7. வாதியானவர் சி தபசில் சந்தை பயன்படுத்தி ஹெச் ஜி சுவரின் தென்பகுதியை யும் பயன்படுத்தி வருவதாக கூறுவது சரியா?
8. வழக்கில் உள்ள 1ம் பிரதிவாதிக்கு பிராது பி தபசில் மற்றும் சி தபசில் சொத்தின் பேரில் உரிமை இல்லையா?
9. வழக்கில் உள்ள 2, 3 எதிர்வாதிக்கும் 4ம் எதிர்வாதியும் வாதியும் சேர்ந்து பிராது சி தபசில் சந்தை பொதுவாக பயன்படுத்தி வருகிறார்களா?
10. வாதிக்கும், 2 முதல் 4 எதிர்வாதிகளுக்கும் சொத்தானது 1 ஆம் பிரதிவாதியின் வடக்குபுறச் சுவரான “ஆர்.ஜே.ஐ.எம்.ஐ.எம்” பகுதி வரை உள்ளதாக வாதி கூறுவது சரியா?
11. பிராது “டி” தபசில் சொத்தான கழிப்பறையையும், குளியலறையையும், 1ம் வாதியானவர் “வி.இசட்.எஸ்.டி என்ற பகுதியை பிராது பி மற்றும் சி சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளரா?
12. வாதிக்கு வழக்கு மூலம் இல்லையா?
13. பிராது “பி” தபசில் சொத்தானது வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கூடியதாக உள்ளதா?
14. பிராது “சி” தபசில் சந்தான வாதிக்கும் 2 முதல் 4 எதிர்வாதிகளுக்கும் தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக் கூடியதாக உள்ளதா?
15. வாதிக்கு வழக்கில் கோரிய முதல்வகை பரிகாரம் கிடைக்கக் கூடியதில்லையா?

16. வாதிக்கு வழக்கில் கோரிய இரண்டாம் வகை பரிகாரம் கிடைக்கக் கூடியதில்லையா?
17. வாதிக்கு வழக்கில் கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக் கூடியதில்லையா?
18. வாதிக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரம் என்ன?

5) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் வாதிக்கு தபசில் சொத்துக்களில் உள்ள பரிகாரங்கள் கிடைக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6) வாதி தரப்பில் வா.சா-1 விசாரிக்கப்பட்டும் வாசாஆ.1 முதல் வாசாஆ.18 வரையிலான ஆவணங்களும், நீ.ம.சா.ஆ-1 மற்றும் நீ.ம.சா.ஆ-2 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2 முதல் 4 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினா்களாகவும், 1ம் பிரதிவாதி தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

7) வாதி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) அசையா சொத்தின் மீது உரிமை பாத்தியதை கோரும் எவரும் அவ்விதமாக பாத்தியதை இருக்கிறது என்பதை தகுந்த சான்றாவணங்கள் மற்றும் சாட்சியத்தின் வாயிலாக நிரூபணம் செய்ய கடமைபட்டுள்ளாா். பிரதிவாதிகள் வழக்கில் ஆஜராகி ஆட்சேபிக்கவில்லை என்பதாலேயே வாதியின் வழக்கு நிரூபணம் செய்யப்பட்டு விட்டதாக கருத இயலாது. வாதி தாக்கல் செய்துள்ள உரிமை ஆவணங்கள் நீதமன்றத்தால் ஏறுகதகுந்ததாகவும், நம்பத்தகுந்ததாகவும், பாத்தியதையை நிரூபிக்க போதுமானதாகவும் அமைந்துள்ளதா என்பதை பாா்க்க வேணடியது அவசியமாகும்.

<u>**9) எழுவினாக்கள் 1 முதல் 4 :-**</u> தபசில் சந்து வாதிக்கும், 2 லிருந்து 4 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கோரியும், அதன் தொடா்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 1ம் பிரதிவாதி சமூகம் நீதிமன்றம் குறிப்பிடும் காலக்கெடுவிற்குள் “ஈ” தபசில் விவரிக்கப்பட்டிருக்கும்

ஆக்கிரமிப்புகளை அகற்ற ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கேட்கப்பட்டுள்ளது. பிராது தபசில் சொத்துக்கள் வரைபடத்தில் EFGCMH என்று காட்டப்பட்டிருக்கிறது. அது வாதியின் தந்தை வீடு மற்றும் அதற்குத் தென்புறம் உள்ள காலிஇடத்தை உள்ளடக்கியது என்றும், பிராது "ஆ" தபசில் சொத்து "அ" தபசில் சொத்திற்குத் தென்புறம் வரைபடத்தில் MCBN என்று காட்டப்பட்டிருக்கும் என்றும் கொல்லை நிலம் "இ" தபசில் சொத்து வாதியின் வீட்டிற்கும் மற்றும் 2, 3, 4 பிரதிவாதிகளின் வீடுகள் வடபுறமாகவும், 1ம் பிரதிவாதியின் வீடு தென்புறமாகவும் இருக்க அவைகளின் நடுவே வரைபடத்தில் ABCR என்று காட்டப்பட்டிருக்கும் சந்து வாதியின் தந்தைக்கும், பிரதிவாதிகள் 2, 3, 4 ஆகியோருக்கும் மட்டும் பாத்தியப்பட்டதாகும் என்பது வா.சா.ஆ-17 மாதிரி வரைபடத்தின் மூலம் அறியமுடிகிறது. எனவே எழுவினாக்கள் 1 முதல் 4 வாதிக்கு ஆதரவாக விடையளிக்கப்படுகிறது.

**<u>10) எழுவினாக்கள் 5 முதல் 10 :-</u>** பிராது "அ" மற்றும் "ஆ" சொத்துக்கள் அதற்கு மேற்கே உள்ள 2, 3 பிரதிவாதிகளின் சொத்தும் ஆதியில் 1ம் பிரதிவாதியின் தந்தை உமாசாகிப்பிற்கும் அவர் தம்பி ஷேக் முகமது சாகிப்பிற்கும் பாத்தியப்பட்டிருந்த சொத்தை அவர்கள் இருவரும் வாதியின் தந்தை வழிபாட்டி ஜென்னாபீவியின் தாயாராகிய தாத்திபீவிக்கு 15.07.1873-ம் தேதிய ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் செய்து விட்டார்கள் என்பது வா.சா.ஆ-1-ன் மூலம் நிரூபணமாகிறது. 14.10.1960-ம் தேதிய பதிவு செய்யப்பட்ட பாகவிஸ்தி பத்திரப்படி வாதியின் தந்தையின் பாட்டி ஜென்னாபீவிக்கு தாவா "அ" மற்றும் "ஆ" அயிட்ட சொத்துக்கள் கிடைத்தன என்பது வா.சா.ஆ-3-ன் வாயிலாக அறியமுடிகிறது. ஜென்னாபீவி 1964-ல் இறந்து போனார் என்றும், அவருக்குப் பின் பாகவிஸ்திபத்திரப்படி "அ" மற்றும் "ஆ" தபசில் சொத்துக்கள் வாதியின் தந்தையின் தந்தைக்கு கிடைத்து அவர் அனுபவித்து வந்தார் என்றும், அவரும் 1986-ல் எந்தவித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்து போனார் என்றும் அவருக்கு வாதியின் தந்தை மட்டும் தான் வாரிசு என்றும், எனவே வாரிசு கிரமத்தில் வாதியின் தந்தை "அ" மற்றும் "ஆ" சொத்துக்களை அடைந்து அனுபவித்து வருகிறார் என்பது வா.சா.ஆ-8 முதல் வா.சா.ஆ-16 சொத்து வரி ரசீது மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. "இ" தபசில் சொத்தை எல்.எப்.ஆடிட் ஆபிஸ் தெருவிற்குப் போகவும், வாதியின் தந்தையின் கொல்லை நிலமான "ஆ" தபசில்

சொத்திற்கு செல்லவும், வாதியின் தந்தை வீட்டின் தென்புற HK சுவரை பராமரித்து செய்யவும், வாதியின் தந்தையின் முன்னோர்களைப் போல் வாதியும், வாதியின் தந்தையும் அனுபவித்து வருகிறார்கள் என்று வா.சா.ஆ-18 கொடிவழி ஜாபிதா மூலம் தெரியவருகிறது. எனவே எழுவினாக்கள் 5 முதல் 10 வாதிக்கு ஆதரவாக விடையளிக்கப்படுகிறது.

<u>**11) எழுவினாக்கள் 12 முதல் 14 :-**</u> KEHMJ2 என்ற பிராது வரைபடத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கும் சொத்து தாத்துபீவியால் உமர்சாஹிப் ஷேக் முகம்மது சாகிப் ஆகியோரிடமிருந்து 29.05.1882 கிரையப்பத்திரப்படி கிரையம் வாங்கி அவரது இளைய மகனான காசீம் பீவிக்கு ஒரு குடும்ப ஏற்பாட்டின்படி கொடுக்கப்பட்டு காசீம் பீவி 12.01.1960ம் தேதிய பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் மூலம் ஹேக்பரீத் சாகிப்பிற்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றும், சி செட்யூல் சந்தில் பகுதியும் அந்த கிரையப்பத்திரத்தில் சேர்ந்து கிரையம் செய்யப்பட்டிருக்கிறது என்றும், ஷேக் பரீத்சாகிப் 13.05.1965-ம் தேதிய உயில் மூலம் அந்த சொத்தை அவர் மகள் ஜவஹர்பீவிக்கு எழுதி வைத்துவிட்டு இறந்துவிட்டார் என்றும், ஜவஹர் பீவி அந்த சொத்தை 2, 3 பிரதிவாதிகளுக்கு 20.05.1991-ம் தேதிய கிரையப்பத்திரம் மூலம் கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்பதும் வா.சா.ஆ-2, 4, 5-ன் வாயிலாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

12) பிராது வரைபடத்தில் LKJJ1Ra என்று காட்டப்பட்டிருக்கும் ஆர்.காளிநாடாருக்கும் அவர் தம்பி சின்னப்பநாடாருக்கும் பாத்தியப்பட்டு இருந்தது. அவர்கள் இருவரும் அந்த சொத்தை 19.12.1895 தேதிய கிரையப்பத்திரம் மூலம் தாத்துபீவியின் அண்ணனாகிய ரோஷன்கான் சாகிப் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றும் அப்படி கிரையம் செய்யப்பட்ட சொத்து வரைபடத்தில் RM என்று காட்டப்பட்டிருக்கும் என்றும் சி செடியூல் சந்தில் AJJ1R பகுதியும் சேர்ந்தே கிரையம் செய்யப்பட்டிருக்கிறது என்பதும் வா.சா.ஆ-6-ன் வாயிலாக நிரூபணமாகிறது. ரோஷன் கானின் வாரிசான ஷேக் சிக்கந்தர் சாகிப் இந்தச் சொத்தை அவரது மகனான 4ம் பிரதிவாதிக்கு 14.12.1993-ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார். எனவே இ தபசில் சொத்து வாதிக்கும், 2லிருந்து 4 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டு பொது அனுபவத்தில் இருந்து வருகிறது என்பது என்பது வா.சா.ஆ-7-ன் வாயிலாக

தெரியவருகிறது என எழுவினாக்கள் 12 முதல் 14-க்கு விடையளிக்கப்படுகிறது.

**<u>13) எழுவினா 11 :-</u>** வாதியின் தந்தை மேற்படி வீட்டின் தெற்குப்புற சுவரில் இருந்த ஜன்னல் கரையான் அரிக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையில் இருந்ததால் அதை எடுத்துவிட்டு வேறு ஜன்னல் மாட்ட முயற்சித்த போது 1ம் பிரதிவாதி வாதியின் தந்தையை தடுத்து நிறுத்தி அப்படி ஜன்னல் வைக்கக்கூடாது என்று ஆட்சேபித்தார் என்றும், தாங்கள் தபசில் சொத்தில் இல்லாததை பயன்படுத்திக் கொண்டு 1ம் பிரதிவாதி பிராது இ தபசில் விவரிக்கப்பட்டிருக்கும் கழிப்பறையையும், குளியலறையையும் தங்கள் வீட்டின் தெற்குச்சுவரான HG சுவருடன் பொருத்திக் கட்டிவிட்டார் என்றும், ஈ தபசில் கழிப்பறை குளியலறை ஆகியவற்றின் வடக்குப்புறச்சுவர் வாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்ட HG சுவராக இருக்கிறது என்றும், 1ம் பிரதிவாதியின் ஆக்கிரமிப்பை கண்டறிந்து நீதிமன்ற ஆணையர் அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்துள்ளார் என்பது நீ.ம.ா.ஆ-1 மற்றும் நீ.ம.சா.ஆ-2-ன் வாயிலாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே 1ம் பிரதிவாதிக்கு எந்தவித பாத்தியதையும் இல்லை என்று வாதி தரப்பில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை முரண்படுத்தும் வகையில் 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரை மட்டும் தாக்கல் செய்து பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி சான்றாவணங்களை தாக்கல் செய்து வழக்கை நிரூபணம் செய்யவில்லை. எனவே வாதியின் வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே எழுவினா-11 வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

**<u>14) எழுவினாக்கள் 15 முதல் 17 :</u>** வாதி தனக்கு தபசில் சொத்துக்களில் உள்ள உரிமை மற்றும் பாத்தியதையை தகுந்த உரிமை ஆவணங்கள் வாயிலாக நிரூபணம் செய்துள்ளார். எனவே வாதிக்கு பிராதில் கேட்டிருப்பது போல் விளம்புகை மற்றும் நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகராம் கிடைக்கத்தக்கது என எழுவினாக்கள் 15 முதல் 17 வாதிக்கு ஆதராவாக விடையளிக்கப்படுகிறது.

**<u>15) எழுவினா 18 :</u>** மேலே விவாதித்த வகையில் வாதி பிராதில் கோரியிருக்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் வாதிக்கு இதர பரிகாரங்கள் எதுவும் வழங்க வேண்டிய அவசியமில்லை என்று இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக பிராதின் “ஆ” தபசில் கொல்லை நிலம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும் அதன் தொடர்ச்சியாக “ஆ” தபசில் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை 1ம் பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், “இ” தபசில் சந்து வாதிக்கும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும் அதன் தொடர்ச்சியாக “இ” தபசில் சந்தை வாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை 1ம் பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், 1ம் பிரதிவாதி ஆறு மாத காலத்திற்குள் “ஈ” தபசில் விவரிக்கப்பட்டிருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் நீதிமன்றத்தின் அமீனா மூலம் “ஈ” தபசில் விவரிக்கப்பட்டிருக்கும் ஆக்கிரமிப்பை அகற்ற செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், “ஈ” தபசில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான செலவுத்தொகை மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகைகளை 1ம் பிரதிவாதி வாதிக்கு கொடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு பின்னர் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2015ம் ஆண்டு ஜுன் திங்கள் 29ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

<u>வாதி தரப்பு சாட்சி:</u>
வா.சா.1 – மூசாகான் நசீர்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>
வா.சா.ஆ.1 – 15.07.1873 பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரம் - சான்றிட்ட நகல்.

வா.சா.ஆ.2 - 29.05.1882 தேதிய கிரைய ஆவணம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.3 - 14.10.1960 பாகப்பிரிவினை பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.4 - 12.01.1960-ம் தேதிய கிரைய ஆவணம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.5 - 20.05.1991-ம் தேதிய கிரைய ஆவணம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.6 - 18.12.1895-ம் தேதிய கிரைய ஆவணம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.7 - 14.12.1993 உயில் ஆவணம் சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.8 - 09.03.1995ம் தேதிய சொத்து வரி ரசீது

வா.சா.ஆ.9 - 09.03.1995ம் தேதிய சொத்து வரி ரசீது

வா.சா.ஆ.10 – 30.03.1996-ம் தேதிய தீர்வை ரசீது அசல்

வா.சா.ஆ-11 – 31.03.1997-ம் தேதிய தீர்வை ரசீது அசல்.

வா.சா.ஆ.12 – 31.03.1997-ம் தேதிய தீர்வை ரசீது 4, 5, 9423 – அசல்.

வா.சா.ஆ-13 – 04.03.1998-ம் தேதியிட்ட தீர்வை ரசீது – அசல்

வா.சா.ஆ-14 – 19.03.1998-ம் தேதிய தீர்வை ரசீது – அசல்

வா.சா.ஆ-15 - 13.03.2006-ம் தேதியிட்ட சொத்து வரி ரசீது – அசல்

வா.சா.ஆ-16 -- 01.03.2007 தேதியிட்ட சொத்து வரி ரசீது – அசல்.

வா.சா.ஆ-17 -- மாதிரி வரைபடம்.

வா.சா.ஆ-18 - கொடி வழி ஜாபிதா – அசல்.

**நீதிமன்ற சான்றாவணங்கள்:**

நீ.ம.சா.ஆ-1 - ஆணையர் அறிக்கை

நீ.ம.சா.ஆ-2 -- ஆணையர் வரைபடம்

**பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் :** இல்லை.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.